EASTERN UNIVERSITY 10 JUN 20

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூண்றாம் வருட/ முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010

(ஜனவரி/ பெப்பிரவரி 2013)

TL 3102 தமிழ் இலக்கிய மரபில் பாரதியின் ஆக்கங்கள்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியிலிருந்து இரு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவையும் தெரிந்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி – I

01. (அ) பாரதி பாடிய விடுதலைப் பாடல்களை வகைப்படுத்துக.

(ஆ) "பெண் விடுதலை" தொடர்பாகப் பாரதி கொண்டிருந்த கருத்துக்களை அவரது ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக.

02. (அ) பாரதி ஆசிரியராகக் கடமையாற்றிய பத்திரிகைகள் யாவை?

(ஆ) பத்திரிகையாளர் என்ற வகையில் பாரதியார் எழுதிய தலையங்கங்கள், கட்டுரைகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு அவற்றிற் காணப்படும் சமூகம், பண்பாடு குறித்த கருத்துக்களை ஆராய்க.

03. சாதி ஏற்றத்தாழ்வுக்கு எதிரான பாரதியின் குரல் அவரது கவிதைகளில் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(2 X 30 = 60 புள்ளிகள்)

## பகுதி – II

04. "சுப்பிரமணிய பாரதியார் தமிழ்க் கவிதையின் பொருளிலும் வடிவிலும் புதிய மரபொன்றை தோற்றுவித்தார்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை நீர் படித்த பாரதியார் கவிதைப் பகுதியினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

05. பாரதி எழுதிய சிறுகதைகளில் சமூகநோக்கு வெளிப்படுமாற்றினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(1 X 40 = 40 புள்ளிகள்)